# கூப்பிய கை

காலைச் சிற்றுண்டியைக் கொண்டுவந்து மேஜையின்மேல் வைத்தான் ஓட்டலில் வேலைசெய்யும் ஒரு பையன். கூர்ந்து பார்த்தேன். காலேஜில் படித்துக்ககொண்டிருக்க வேண்டிய வயசு; இப்படிப் பரிசாரகப் பிள்ளையாக இருக்கிறான். கடவுள் தாம் எப்படித் திருவிளையாடல் புரிகிறார்?

"பத்திரிகைக்காரப் பையன் வருவானா? எனக்கு வேணுமே!" என்று கேட்டேன்.

பையன், "நான் தருகிறேன் ஸார்" என்றான்.

"ஏஜெண்டா நீ?"

"இல்லை ஸார்; ஒரு மாசமாய்த் தினமும் வாங்குகிறேன். அடைபட்டிருக்கிறோமே, உலகப்போக்குத் தெரிய வேணுமே என்று ஆரம்பித்தேன். இதோ கொண்டுவந்து தருகிறேன்" என்று விரைந்து சென்றான் அவன். பத்திரிகையுடன் திரும்பி வந்தான்.

"எதுமட்டும் படித்திருக்கிறாய்?" என வினவினேன்.

"மூன்றாவது பாரம் படிக்கும்போது அப்பா போய்விட்டார். அப்புறம் படிப்பு நின்று போயிற்று, ஸார்" என்று பதில் அளித்தான்.

"கடமையைச் செய்; கடவுளை நம்பு. நன்மையே உண்டாகும்" என்று ஆறுதலாகப் போதனை செய்தேன். பையன் புன்னகை செய்தான்.

"ஏன்? நன்மை வரும், நல்ல காலம் வரும் என்று நம்பிக்கை தோன்றமாட்டேன் என்கிறதோ? நம்பிக்கை வேண்டும் அப்பா! வரவழைத்துக்கொள். கடவுள் துணை செய்வார்" என்று சொன்னேன். களைபொருந்திய அழகான முகம்; பளிச்சிடும் பார்வை.

"வருங்காலத்தில் நம்பிக்கை இருக்கிறது, ஸார். ஆனால் கடவுளிடந்தான் நம்பிக்கை இல்லை" என்றான்.

"நம்பினவர்க்கு நாராயணன், நம்பாதவர்க்குப் பாறாங்கல். உனக்குப் பகவான் நல்ல புத்தி கொடுக்கட்டும்" என்று சொல்லிப் பத்திரிகையை புரட்டினேன்.

"நீங்கள் பாருங்கள் ஸார் பத்திரிகையை" என்று பையன் நகர்ந்தான் அப்பால்.

சுமார் எட்டரை மணிக்கு என் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டேன்.

"பையா, உன் பேர் என்ன? இங்கே வா" என்று அழைத்தேன்.

"என் பேர் சுப்பிரமணியன்" என்று சொல்லி முறுவலித்தான்.

"இங்கே பக்கத்தில் ஏதாவது கோயில் இருக்கிறதா? சுவாமி தரிசனம் பண்ணிவிட்டுப் போவேன், போகிற போக்கில்" என்றேன்.

"இந்தத்தெரு முனை திரும்பாமல் நேராகப் போனால் ஒரு சின்ன வாழைத்தோட்டம் தெரியும். அதற்குள்ளே போனால் அனுமார் கோயில் ஒன்று இருக்கிறதாம். வேறு கோயில் ஏதும் இந்தப் பக்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை" என்றான் அவன்.

"நீ விசாரித்திருந்தாலல்லவா தெரியும்?" என்று கேட்டுவிட்டு 'டாக்ஸி'யில் ஏறி அமர்ந்தேன். செல்வமும் பதவியும் எத்தனை இருப்பினும் கடவுளை மறக்காதவன் நான் என்பதைச் சுப்பிரமணியன் அறியட்டுமே!

ஸ்ரீராமஜயம் சொல்லிவிட்டுச் செயலில் இறங்கும் வழக்கமுள்ளவன் நான். ஆயிரக்கணக்கில் பண வரவு செலவு செய்து நூற்றுக் கணக்கில் சொந்தச் செலவு செய்யும் பேறு பெற்றவன். அப்படிப்பட்ட நான் ஒரு சிக்கலில் அகப்பட்டுக்கொண்டேன்; நான் உடனே ஊரைப் பார்க்கப் போனால்தான் பயனுண்டு என்ற நிலைமை ஏற்பட்டது.

பெட்டிக்குள் தனியாக ஒரு பைக்குள் ஒரு கட்டுப் பணநோட்டு வைத்துக்கொண்டு புறப்பட்டதாக நினைவு. ஆனால் அதை இப்போது காணவில்லை. ஊரிலேயே தங்கிவிட்டதா? வழியிலே கெட்டுப்போயிற்றா? இங்கே ஓட்டலில் யாரும் எடுத்திருக்க முடியாது. ஊர்போய்ச் சேரக்கூடப் பணம் போதாது யாரைக் கேட்பேன்! நண்பர் உறவினர் யாரும் இந்த ஊரில் இல்லை என்று தானே ஓட்டலில் தங்கியிருக்கிறேன்?

"குளிர்ந்த பானம் ஏதாவது வேணுமா ஸார்? வாட்டமாயிருக்கிறீர்களே!" என்று கேட்டுக்கொண்டே சுப்பிரமணியன் வந்தான்.

"பானைத் தண்ணீர் கொண்டுவா; போதும் இப்போது என் கையில் சுண்டியிழுக்கிறது' என்று முறுவலுடன் என் கஷ்டத்திற்குக் கோடி காட்டினேன்.

"என்ன ஸார்?" என்று அவன் கேட்டதும், "நீ போய் ஜலம் கொண்டுவா, சொல்கிறேன்" என்று அனுப்பினேன்.

'குறைந்தது எழுபது ரூபாயாவது இருந்தால்தான் புறப்பட முடியும். சுப்பிரமணியனைக் கடன் கேட்கலாமா? இருக்குமா? வறட்டுப் பயல், ஜம்பமாக ஓட்டலுக்கு வந்துவிட்டான் என்று நினைப்பானோ? படே ஆசாமி மாதிரி வந்து ஏமாற்றிச் செல்லும் மோசக்காரர்களைப் பற்றி எத்தனை செய்திகள் கேள்விப்படுகிறோம்!'

இப்படிக் குன்றிப் போயிற்று ஒரு புறத்து மனம். ஆனால் என் உண்மையுணர்ச்சியோ நிமிர்ந்தே நின்றது. 'கடன் தா என்று ஏழையிடம் கேட்க வெட்கம் என்ன?' என்று விறைத்தது.

குளிர்ந்த நீருடன் வந்தான் பையன்.

"சுப்பிரமணியா, உன்னிடம் சொல்ல வெட்கப்பட்டால் பயன் இல்லை. எனக்கு ஓர் எழுபது ரூபாயாவது உடனே வேண்டும். கையில் இருக்கிற மோதிரத்தை விற்றுப் பணம் பண்ணலாம் என்றால் மனசு வரவில்லை. நீ கொடுத்து உதவ முடியுமா? கொடுத்தாயானால் ஊர் போய்ச் சேர்ந்ததும் அனுப்புகிறேன் பணம். நீ என் மோதிரத்தை அப்புறம் அனுப்பலாம். இது பரஸ்பர நம்பிக்கையின்மேல் நடக்கிற காரியம்" என்று சொல்லிவிட்டேன்.

ஒரு விநாடிகூடத் தயங்கவில்லை பையன்; "நம்பிக்கையின் மேல் நடக்கிறதானால் மோதிரம் எதற்கு ஸார்?" என்று கேட்டான்.

"இருக்கட்டுமே மோதிரம், தாற்காலிகமாக" என்றவாறு கழற்றி நீட்டினேன்.

"வேண்டாம் ஸார்; அறுபது ரூபாய் என்னிடம் இருக்கிறது. போதுமானால் தருகிறேன். ஊருக்குப் போய் அனுப்புங்கள்" என்று மொழிந்தான் அவன்.

கடவுளை நம்பாவிட்டாலும் மனிதர்களின் நேர்மையை நம்பும் அவனிடம் என் உள்ளம் தாழ்ந்தது. சமாளித்துவிடலாம் என்ற உறுதியுடன் சுப்பிரமணியன் கொடுத்த அறுபது ரூபாயைப் பெற்றுக்கொண்டேன். "உன் உதவிக்கு ஈடே இல்லை அப்பா. இன்றைக்கு ஏழாம் நாள் உனக்கு வந்து சேரும்" என்று வந்தனமும் தைரியமும் சொன்னேன்.

ஓட்டலுக்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்த வாசற்புறம் வந்தேன். அங்கே ஓர் அதிசயம் காத்திருந்தது!

"அதோ வந்து கொண்டிருக்கிறாரே அவர்தாம்" என்று ஓட்டல் முதலாளி ஒரு காக்கி உடுப்புகாரரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்; என்னைச் சுட்டிக் காண்பித்தார்.

என் பிள்ளை தந்தியடித்துவிட்டான்; "தங்கிவிட்டது 'பர்ஸ்'. அதிலிருந்த தொகையைப் பாங்குமூலம் தந்தி ட்ராப்ட் செய்துவிட்டேன். அங்கே பெற்றுக்கொள்க."

ஆஹா! கடவுளின் அருளே அருள்! உடனே சுப்பிரமணியனைத்தான் தேடி ஓடினேன்.

"உன் கை தங்கக் கையப்பா! அறுபது ரூபாய் கொடுத்தாய்; இரண்டாயிரம் வந்து சேர்ந்துவிட்டது" என்று குதூகலித்தேன்.

"சந்தோஷம் ஸார்."

"நான் இன்னும் இரண்டு நாள் தங்கப்போகிறேன். போகும் பொழுதுதான் உன் பணத்தைத் தருவேன். நீ கொடுத்த பணம் என்னிடம் இருக்கிற வரைக்கும் என் காரிய சித்தியில் சந்தேகமே இல்லை" என்றேன்.

"இருக்கட்டும் ஸார். இரண்டாயிரம் ரூபாய் வந்த பிறகும் அந்த அறுபது பெரிதாகத் தோன்றுகிறது என்பதைக் கேட்க எனக்கும் சந்தோஷந்தான்" என்று குறுநகை செய்தான் அந்தச் சாமர்த்தியக்காரன். தொழில் முறையில், "ராத்திரிக்குச் சப்பாத்தியும் கூட்டும் கொண்டு வந்தால் போதுமா ஸார்? தேங்காய்ச் சட்டினியும் இருக்கிறது" என்றான்.

"சரி, அதையும் கொஞ்சம் வைத்துவிடு. தேவலையே! காலையில் சொன்னதை நினைவு வைத்திருக்கிறாயே! ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு தினுசு கேட்பார்கள். நினைவாகக் கொண்டு வந்து தருவது சிரமந்தான். நான் வடக்கேயே எட்டு வருஷமாக இருக்கிறேன் அல்லவா? சப்பாத்திதான் இரா வேளையில் வழக்கமாகிவிட்டது" என்று சொன்னேன். அவனும் ஏதாவது கலகலப்பாகப் பேசட்டுமே என்றுதான் தேவைக்கு மீறிப் பேசினேன். ஆனால் அவனோ தன் நிலைமைக்கு ஒவ்வாத உரிமை கூடாது என நினைத்தான் போலும்! "கொண்டு வருகிறேன் ஸார்" என்று கிளம்பிவிட்டான்.

"சுப்பிரமணியா!" என்று அழைத்து நிறுத்தினேன்; "காலையில் கோயிலுக்குப் போகவில்லை. வாழைத் தோட்டத்தில் புகுந்து வெளிவர நேரம் இருக்கவில்லை. இப்பொழுது, வந்த கஷ்டம் பனிபோல் கரைந்த இந்தச் சமயத்திலாவது தரிசனம் செய்து வருகிறேன். ஆகாரங்கூட இன்றைக்கு ராத்திரி வேண்டாம்" என்று கூறினேன். "சரி ஸார்" என்று போய்விட்டான்.

ஓட்டல் வாசலைவிட்டு இறங்கிக் கொஞ்சம் நடந்தேன். ஓடிவந்தான் சுப்பிரமணியன். "இருட்டாய் இருக்கும் ஸார் என்று சொல்லி ஒரு டார்ச்சு விளக்கைக் கொடுத்தான்.

"ஓ! நன்றி. தோன்றவே இல்லை எனக்கு. தோன்றியிருந்தாலும் விளக்கு என்னிடம் இல்லை. உன்னைத்தான் கேட்டிருப்பேன்."

"நாளைக்கு மத்தியானம் முதல் ராத்திரி வரைக்கும் என் 'ட்யூட்டி' ஸார். காலையில் வேறொரு பையன் உங்களைக் கவனிப்பான். விளக்கை நாளைக்குச் சாயங்காலம் கொடுங்கள்" என்றான் பையன்.

"இன்று நாள் முழுதும் நீயே வந்தாயே!" என்று கேட்டேன்.

"ஆமாம் ஸார், இன்றைக்கு இப்போது வந்திருக்க வேண்டிய பையனுக்கு உடம்பு சுகம் இல்லை. நாளைக்கு எனக்கு அரைநாள் தான்; ராஜுவுக்காகத்தான் நாளைக்குச் சாயங்காலம் வருவேன்" என்றான்.

"நீயும் வாயேன்; கோயிலுக்கே போகமாட்டாயோ?" என்று கேட்டேன்.

"போகக்கூடாது என்று வீம்பு இல்லை ஸார்; போய் ராஜுவுக்குக் கஞ்சி போட வேணும். வருகிறேன் ஸார்" என்று சொல்லிவிட்டான்.

நான் கோயிலை நோக்கி நடந்தேன். சுப்பிரமணியனை எடைபோட்டது மனம். உபகாரி; உழைக்கப் பிறந்தவன். என்ன காரணத்தாலோ, என் மனம் அவனிடம் ஈடுபட்டது. கோயிலின் இருப்பிடத்தை மீண்டும் ஒரு முறை சொல்லிவிட்டுத் தன் துணை அவசியமில்லை என்று திரும்பிப் போன அவன் குணம் என் உள்ளத்தில் சலசலத்தது. ஓட்டல் பணியாள் வேலை என்பது ஓர் ஆண்மகன் எத்தகைய நெஞ்சுரத்தோடு செய்ய வேண்டிய வேலை!

சுப்பிரமணியன் கொடுத்திருந்த விளக்குத்தான் எத்தனை பயன்பட்டது! வாழைத்தோட்டத்தின் வழியே போகும்போதாவது நிலவும் தெருவிளக்கின் வெளிச்சமும் இருந்தன. தோட்டத்துப் பாதையும் நன்றாய் இருந்தது. ஆனால் கோயிலுக்குள்ளே இருட்டு; அடைசலாகவும் இருந்தது. சரவிளக்கு ஒன்று தொங்கிற்று. அதில் இரண்டே குழிகளில் எண்ணெய்த் திரிகள் சுடரிட்டன. அந்த வெளிச்சம் போதவில்லை. டார்ச்சு விளக்குப் போட்டுத்தான் மாருதியைத் தரிசனம் செய்துகொண்டேன்.

மறுநாள் மாலை விளக்கைத் திருப்பித் தந்தபொழுது, இதைச் சொன்னேன், சுப்பிரமணியனுக்கு, "பகல் வெளிச்சத்தில் ஒரு தடவை போய்ப் பார்த்துவிடுங்கள் ஸார்; உங்களுக்குத் திருப்தியாகும்' என்று சொன்னான்.

நல்ல விஷயத்தை யார் சொன்னாலும் கேட்கத்தானே வேண்டும்? மூன்றாம் நாள் காலையில் ஸ்நானபானம் முடித்துக்கொண்டு கோவிலுக்குப் போனேன். சிறிய கோவிலானாலும் சுத்தமாக இருந்தது. வாலை நீள வளைத்துக்கொண்டு சஞ்சீவி மலையைத் தூக்கிய நிலையில் அனுமார் நின்றிருந்தார். பக்தியினால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை என்பதை உணர்த்தும் திருக்கோலம். இளம்பிள்ளை ஒருவன் குருக்களாக இருந்து தீபாராதனை செய்து பிரசாதம் வழங்கினான். வழி வழி வந்த கடமையுணர்ச்சியில் பூஜை செய்தான். பக்தி இருக்குமோ என்னவோ?

சுப்பிரமணியன் இருக்கிறான்; குணசாலி. அவனுடைய பேச்சின் நிதானம், தாழ்மையின் கம்பீரம், உழைப்பின் மேன்மை எல்லாம் மனத்தைக் கவருகின்றன. ஆனால் கடவுள் பக்தி என்பது உயிர்ச் சக்தியின் இன்றியமையாத இணை. இதை மட்டும் அவன் அறியவில்லையே!

மாலையில் வந்தான் சுப்பிரமணியன். "உன் சிநேகிதனுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? இந்தா குங்குமம், கோயில் பிரசாதம். அவனுக்கு இடு" என்று கொடுத்தேன். பெற்றுக்கொண்டே, "அப்படியே இருக்கிறது ஸார். இரண்டு நாளில் தணிந்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்றான்.

"நம்பிக்கையோடு இந்தக் குங்குமத்தை இடு" என்று நான் புன்முறுவலோடு சொன்னேன். அவனும் மென்னகை காட்டினான்.

"நீ நம்பாவிட்டாலும் நான் நம்பிக் கொடுக்கிறேன், சுப்பிரமணியா. கடவுள் இருக்கிறார் என்பதில் எனக்கு மிகவும் நம்பிக்கைதான், அப்பா. நீயே சொல். இந்த உலகத்தில் எத்தனை அற்புதங்கள்? ஒவ்வொரு செடியும் ஒரு தனிச் சிருஷ்டி. அதற்கென்று ஒரு தனி அழகு; தனித்தன்மை. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு விதமான கனியைத் தருகிறது, அல்லது பூவைக் 'கொடுக்கிறது. புல்பூண்டு தினுசுகள் ஆயிரமாயிரம். தழைகள்கூட மருந்துப் பொருள்கள். விஷமுள்ள இலை கனிகளும், பூச்சிபொட்டுகளுங்கூட ஏதோ காரணமாகத்தான் இருக்கின்றன. கோடானுகோடி உயிர்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன, பிறக்கின்றன, அழிகின்றன. ஒரு மனுஷனைப் போல இன்னொருத்தன் இல்லை. இந்தச் சிருஷ்டியெல்லாம் எப்படி வந்தன? கடவுள் என்று ஓர் உருவம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. இறைவன் அல்லது சக்தி என்ற அதீதமான பரம்பொருள் இருக்கத்தான் இருக்கிறது. நம் மனத்தில் அந்தப் பரம்பொருளைப் பிரதிஷ்டை செய்துகொள்ளத்தான் ஓர் உருவத்தை வைத்திருக்கிறோம், ஒரு பெயரைச் சூட்டுகிறோம். அந்தக் கடவுளிடம் நம்பிக்கை வைத்து நடந்துகொள்வதுதான் பக்தி. அது நிச்சயம் நன்மைதான் தருமே தவிர வேறு ஒன்றும்

செய்யாது. நம்பிக்கை இருக்கிறது வாழ்க்கையில் என்று சொன்னாயே; அந்த நம்பிக்கையில்லாமல் வாழப் பார். மனசு கெட்டுப்போகும். அதே போலத்தான் இதுவும், என்ன சொல்கிறாய்?"

இப்படிக் கேட்டு நிறுத்தினேன். கடவுள் இருக்கிறார் என்பதற்கு நான் ஒரு சொற்பொழிவு நிகழ்த்திய முதற் சம்பவம் இது. நன்றாகப் பேசினேன் என்ற உவகை எனக்கு. கண் பார்வையைத் தாழ்த்திவிட்டுச் சுப்பிரமணியன் பதிலளித்தான். "நான் என்ன சொல்ல ஸார்? கடவுளைத் தொழவேண்டும் என்று தோன்றினதில்லை; ஏனோ?" என்றான்.

நான் தொடர்ந்தேன். "இன்னமும் சொல்கிறேன், கேள். விஞ்ஞான அறிவு இருக்கிறது பார், அது என்னவென்று சொல்கிறது தெரியுமா? ஜலவாயு பிராணவாயு என்று என்ன என்னவோ இருக்கின்றனவே, அவையெல்லாம் இந்தப் பூமண்டலத்தில் அப்படி அப்படியே பலவிதக் கலவைகளாகி, இத்தனை விதமான சிருஷ்டிகளைச் செய்துவிட்டனவாம். அந்த விதமாக லேபரேடரியில் கூட உயிர்களைச் சிருஷ்டித்துவிட முடியுமாம். அப்படியானால் நான் என்ன சொல்லுவேன்! இந்த உலகமே பெரிய லேபரேடரி; கடவுள் தான் இதை அமைத்த விஞ்ஞானி என்பேன். உடலுக்கு வந்த பெருமையே மனத்தினாலும் ஆத்மாவாலுந்தானே? என்ன என்னவோ ஆராய்ச்சி பண்ணி எழுதிக் குவிக்கிறார்கள். ஆனால் எனக்கு இவற்றைப் படிக்கப் படிக்கக் கடவுளிடம் பக்தி வளருகிறது. நான் என்ன செய்ய? அதனால்தான் உனக்கும் உபதேசம் செய்யத் தோன்றுகிறது" என்று சொல்லி ஓய்ந்தேன்

"நீங்கள் பெரியவர்; புத்தி சொல்வது நியாயந்தானே ஸார்? எனக்கும் பக்தி கிடையாது என்பதில்லை. என்னவோ சொல்லத் தெரியாத மனப்பான்மைதான்" என்றான் தலை சாய்த்த சுப்பிரமணியன்.

அன்றிரவே நான் என் அலுவலை முடித்துக் கொண்ட பரமதிருப்தியுடன் மூட்டை கட்டினேன். "இந்தா சுப்பிரமணியா; நீ பணம் கொடுத்த தங்கக் கையை நீட்டு. உனக்கு ஒரு மோதிரம் என் நினைவாகத் தருகிறேன்; போட்டுக்கொள்" என்று நீட்டினேன்.

அவன் எனக்குக் கை கொடுத்துப் பணி புரிந்ததனால் விரல்களின் அளவு மனத்தில் பதிந்துதான் இருந்தது. மோதிரம் வாங்கிவிட்டேன். சரியாகத்தான் இருக்கிறதுஎன்பதைப் பார்த்துவிட்டால் போதும்.

"வேண்டாம் ஸார். இப்படியெல்லாம் வாங்கிப் பழக்கம் இல்லை" என்று பின்வாங்கினான்.

"இது லஞ்சமா?" என்ற தாபத்துடன் நான் மூன்று நான்கு தடவை வற்புறுத்தி என் பரிசை ஏற்கச் சொன்னேன். சட்டைப் பையில் போட்டுவிடலாம் என்று பார்த்தால் இரு கரங்களையும் தன் மார்போடு பிணைத்துக் கட்டி வீறுடன் நின்றான் அவன்.

"அடடே! உன்னுடைய பணத்தைக் கொடுக்க மறந்தேனே! அதற்குப் பதில் இந்த மோதிரம் தருகிறேன் என்று பார்த்தாயோ? அதற்கு நன்றி துணைதான் இது. எங்கே மணி, பிடியேன்" என்று கொஞ்சினேன்.

"முடியாது ஸார்" என்று சொல்லிவிட்டு விருட்டென்று போய்விட்டான்.

எத்தனை ஆணவம் என்று மனம் குமுறிற்று. ஆனால் என் கோபம், சடுதியில் விலகிறது.

அவசரத் தந்தி கொடுத்துத் தந்தையின் சிக்கலைத் தீர்த்த என் பிள்ளைக்குத்தான் பரிசாகட்டுமே மோதிரம்! பெட்டியில் அதைப் பத்திரப்படுத்திவிட்டு, பணப்பையை எடுத்தேன். சுப்பிரமணியனுக்குக் கொடுக்க எண்ணி எடுத்து வைத்துத் தனி உறையில் இட்டேன். என்னை வழியனுப்பும் பணிக்கு வந்த சுப்பிரமணியனிடம் வந்தனம் சொன்னேன். வாசலில் டாக்ஸி நின்றிருந்தது.

"வருகிறேன் சுப்பிரமணியா, மறுபடியும் நாம் சந்திப்போமா என்பது கடவுளுக்குத் தான் தெரியும்" என்று கூறி விடைபெற்றேன்.சரியாகத்தான் கொடுத்திருப்பேன் என்று அவனுக்கு நம்பிக்கை; நான் கொடுத்த உறையைக்கூடப் பிரிக்காமல் கையில் பற்றிக்கொண்டு, என்னிடம் ஏற்பட்ட பக்தியை நெஞ்சில் தாங்கிக்கொண்டு என்னை நோக்கிக் கை கூப்பினான் அந்த ஓட்டல் பையன்.

** ** **

நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அதே ஊருக்கு வந்தேன். அதே ஓட்டலுக்கு வந்தேன். சுப்பிரமணியனைப் பார்ப்போமா என்று நைப்பாசை.

ஆனால் அவனைக் காணவில்லை. காலைச் சிற்றுண்டி கொண்டுவந்த பையனைக் கேட்டேன். அவன், "ஹூம், தெரியாது ஸார். நான் இங்கே வேலைக்கு வந்து ஒன்றரை மாதம்தான் ஆகிறது. இந்த வேலையில் இந்த ஹோட்டலில் நாலு வருஷம் நிலைக்கப் பொறுமை யாருக்கு வரும் ஸார்? அப்படித் தங்கிறவனைக் கோயிலில் வைத்துத்தான் கும்பிட வேணும். அந்தப் பகவானுக்குக்கூடப் பொறுமை வராது" என்று பதிலளித்தான்.

நான் மனசுக்குள் சிரித்துக்கொண்டேன்.

கோயிலைப் பற்றி நினைப்பூட்டிவிட்டான் இந்தப் பையன். இவ்வூர் வரும்பொழுது சுப்பிரமணியனின் நினைவுதான் இருந்தது; கோயிலை மறந்தே போனேன். அதற்குக் காரணம் தெரிகிறது. போகும் இடங்களில் எல்லாம் பல கோயில்களைப் பார்க்கிறேன். ஆனால் சுப்பிரமணியனைப் போன்ற பையனைப் பார்த்ததில்லையே!

அனுமாரைத்தரிசனம் செய்யப் போனேன். வாழைத்தோட்டம் அடர்த்தி குறைந்திருந்தது. முன்பு தென்படாத நீர்க்குழாய் ஒன்று தோட்டத்தின் உட்புற வரம்பில் பிரதிஷ்டையாகியிருந்தது. இரண்டொரு சிறுவர்கள் வண்ணக் காகிதங்களால் தோரணங் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன விசேஷம்?" என்று பூசாரியைக் கேட்டேன்.

"மூன்று நாளைக்கு அனுமார் லீலை என்று பொம்மைகள் வைத்துக் கொலு அமைப்போம். நாளை ராத்திரி ஆரம்பம்' என்றார் அவர்.

ராத்திரியா? வெளிச்சம் ஏது? காஸ்லைட் கொண்டு வருவீர்களா?" என்று சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்தேன்.

ஆச்சரியம்! மின்சார விளக்கு இருக்கிறது! "எப்போது போட்டீர்கள்? நாலு வருஷத்திற்கு முன்பு வந்தேன். அப்போது இருக்கவில்லையே!" என்று வியப்புடன் மகிழ்ந்தேன்.

"நாலு வருஷமாக இருக்கிறதே ஸ்வாமி; உங்கள் மாதிரிப் பெரியவர்கள் உபயம்" என்றார்.

கோயிலை வலம் வரும்பொழுது கவனித்துக்கொண்டே வந்தேன். ஏதாவது பழுது இருந்தால் சரி செய்யப் பார்ப்போமா என்று எண்ணம்.

வாசகம் ஏதோ பொறிக்கப்பட்டிருந்த கருங்கல் ஒன்று தென்பட்டது. அணுகிப் படித்தேன். மறு விநாடி வேகமாகப் பூசாரியிடம் ஓடி, "அந்த மனுஷன் யார்?" என்று வினவினேன்.

"அதுதான் சொன்னேனே ஸ்வாமி. உங்கள் மாதிரி யாரோ புண்ணியவான் கோயிலுக்குக் கண் கொடுத்திருக்கிறாரே, அவர் தாம்" என்றார் பூசாரி. விளக்குகளே கண்களாம்; ஒளி படைத்தவனல்லவா?

"அதுதான் எழுதியிருக்கிறதே!" என்று முணுமுணுத்துவிட்டு, "எத்தனை கொடுத்தார்' என்று கேட்டேன்.

"தெரியாது ஸ்வாமி. ஐம்பது ரூபாய்க்கு மேலே இருக்கலாம்" என்றார்.

என் வேலையைப் பார்த்துக்கொண்டு மாலையில் ஓட்டலுக்கு மீண்டேன். காலையில் வந்தவனைவிட வயசில் சற்றுப் பெரியவனான ஓர் இளங்காளை என் அறைக்கு வந்தான்.

சுப்பிரமணியனைப் பற்றி ஓட்டல் முதலாளியிடம் கேட்கச் சந்தடி குறையும் இரவு வரையில் காத்திருக்கப் பொறுமை இல்லை. இந்தப் பையனைக் கேட்டேன்.

"சுப்பிரமணியன் என்ற பையனைப் பற்றி இந்த ஓட்டலில் யாருக்காவது தெரியுமா அப்பா? ராஜு என்றப் பையனாவது இருக்கிறானா?" என்று விசாரித்தேன்.

பையம் லேசாகச் சிரித்துவிட்டு, "நான்தான் ராஜு ஸார்; என் சிநேகிதன்தான் சுப்ரி" என்றான்.

சுப்பிரமணியன் ஸ்கூல்பைனல் பரீட்சையாவது கொடுத்துத் தேற வேண்டுமென்று பிடிவாதத்தோடு போனானாம். வீம்பு வெற்றியளிக்கவே இப்போது பட்டணத்தில் டைப்பிஸ்ட் வேலை செய்கிறானாம்.

"நீ நாலு வருஷமாய் இங்கேயே இருக்கிறாயா?" என்று பரிவு மேலிடக் கேட்டேன்.

சிறுத்துப் போயிற்று அவன் முகம். "இந்த வேலைக்கு, முழுக்குப் போடவேணுமென்று நானும் கிளம்பிப் போயிருப்பேன். . அதிருஷ்டம் வேண்டாமா? கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்று மறுபடியும் இந்த ஐ.பி.எஸ் உத்தியோகம் பார்க்க வந்து சேர்ந்தேன். என்ன பிழைப்பு, ஸார்!" என்று தன் குறையைக் கொட்டினான்.

"உனக்குத்தான் உடம்பு சரியில்லை என்று சொல்லியிருந்தான்; அதனால் உன் பேர் நினைவிருந்தது. சுப்பிரமணியன் நல்ல பையன்" என்று சொன்னேன்.

ராஜுவோ முகம் மலர்ந்தான். "ஓ நீங்கள்தானா ஸார்? சுவாமி பிரசாதக் குங்குமம் கொடுத்தீர்களே? என் நெற்றியில் இட்டுக் கொண்டே சொன்னான், உங்களைப் பற்றி. அதன் மகிமை தானோ என்னவோ, மறுநாளே சுரம் இறங்கத் தொடங்கிற்று, ஸார்" என்று குஷாலாகச் சிரித்தான்.

"சுப்பிரமணியனுக்கு மட்டும் நம்பிக்கை வந்திருக்காதே!" என்று கிண்டினேன்.

"அதென்னவோ ஸார்; அப்புறம் அடுத்த மாசமே கோயிலுக்கு மின்சார விளக்குப் போடப் பிரயத்தனம் செய்துவிட்டான். ஏதடா பணம் என்று கேட்டதற்கும் பதில் சொல்லவில்லை. அவன் அலாதி பிறவி அதிருஷ்டமும் இருக்கிறது. டைப்பிஸ்ட் என்றாலும் அது மதிப்பான வேலை ஸார். ஹும், உங்களுக்கு என்ன ஸார்? ஓவல்டின்னா?"

ஓடிப்போனான் ராஜு. நான் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

சுப்பிரமணியனுக்கு என்னிடம் பக்தி அதிகமா? என் பணத்தில்தான் அலட்சியமா? அவனுக்குக் கடவுள் பக்திதான் வந்துவிட்டதா? அல்லது தெய்வ வழிபாட்டில் பற்றுக்கொண்ட என் ஆன்மா திருப்தி கொள்ளட்டுமே என்னும் கனிவுதானா?

என் நெஞ்சு கனத்தது. கூப்பிய கையுடன் அன்று அவன் எனக்கு விடை அளித்தபோது காட்டிய வணக்கம் அப்புறம் மாறியிருக்கக் கூடாது, கடவுளே, மாறக்கூடாது. தகுதிக்கு மீறிய பெருமையைப் பெற்று என் நெஞ்சு கனக்கிறது. நான் அன்புடன் செய்த செயல் அவனையே பெருந்தகையாக வைத்திருக்கட்டும்.

சுப்பிரமணியனுடைய உரிமைப் பணமான அறுபது ரூபாயோடு என் பரிசுப் பணமாக மற்றோர் அறுபதும் சேர்த்துக் கொடுத்திருந்தேன். அன்றைக்கு அந்த உபரித் தொகையைக் கொண்டுதான் அவன் கோயில் திருப்பணி செய்துவிட்டான். சந்தேகமே இல்லை எனக்கு. கோயிலில் கருங்கற் சதுக்கத்தின் மேல் ஒளிர்கிறது என் திருநாமம்.

*********

**(கலைமகள், ஜூலை, 1950)**